www.Padasalai.Net www.CBSEtips.in

V9T

விருதுநகர் மாவட்டம்
இரண்டாம் இடைப் பருவ பொதுத் தேர்வு - 2023

வகுப்பு 9

நேரம்: 1.30 மணி

தமிழ்

மதிப்பெண்கள்: 50

**I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:** **8×1=8**

1) **பொருத்தமான விடையைத் தேர்க:**

அ) சிறுபஞ்சமூலம் - 1. காப்பிய இலக்கியம்
ஆ) குடும்ப விளக்கு - 2. சங்க இலக்கியம்
இ) சீவகசிந்தாமணி - 3. அற இலக்கியம்
ஈ) குறுந்தொகை - 4. தற்கால இலக்கியம்

க) அ-3, ஆ-4, இ-1, ஈ-2 உ) அ-2, ஆ-3, இ-1, ஈ-4
ங) அ-3, ஆ-1, இ-4, ஈ-2 ச) அ-4, ஆ-1, இ-2, ஈ-3

2) தேவதாசி ஒழிப்புச் சட்டம் நிறைவேறத் துணை நின்றவர் ............
அ) முத்துலெட்சுமி ஆ) மூவலூர் இராமாமிர்தம்
இ) பண்டித ரமாபாய் ஈ) சாவித்திரிபாய் பூலே

3) மரவேர் என்பது ............ புணர்ச்சி.
அ) இயல்பு ஆ) திரிதல் இ) தோன்றல் ஈ) கெடுதல்

4) திருநாதர்குன்றில் ஒரு பாறையில் புடைப்புச் சிற்பங்களாக உள்ளவை ............
அ) விலங்கு உருவங்கள் ஆ) தீர்த்தங்கரர் உருவங்கள்
இ) தெய்வ உருவங்கள் ஈ) நாட்டியம் ஆடும் பாவை உருவங்கள்

5) ''சூடிக் கொடுத்த சுடர்க்கொடி'' என அழைக்கப்பெற்றவர் ............
அ) ஆண்டாள் ஆ) மணிமேகலை இ) ஒளவையார் ஈ) ஆதிமந்தியார்

6) 'அன்று' என்பது ............ 'அல்ல' என்பது ............ உரியன.
அ) காலத்தையும், செயலையும் ஆ) செயலையும், காலத்தையும்
இ) ஒருமைக்கும், பன்மைக்கும் ஈ) பன்மைக்கும், ஒருமைக்கும்

**''பூவாது காய்க்கும் மரம் உள; நன்று அறிவார்,**
**மூவாது மூத்தவர், நூல் வல்லார்; தாவா,**
**விதையாமை நாறுவ வித்துஉள; மேதைக்கு**
**உரையாமை செல்லும் உணர்வு''**

7) இப்பாடலில் இடம்பெறும் அடி எதுகை ............
அ) பூவாது, மூவாது ஆ) விதையாமை, உரையாமை
இ) விதையாமை, மேதைக்கு ஈ) மூவாது, மூத்தவர்

8) இப்பாடல் இடம்பெறும் நூல் ............
அ) குடும்ப விளக்கு ஆ) இராவண காவியம்
இ) சிறுபஞ்சமூலம் ஈ) நாச்சியார் திருமொழி

**II. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி:** **3×2=6**
**(குறிப்பு: 13 ஆம் வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்)**

9) சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?
10) இடிகுரல், பெருங்கடல் - இலக்கணக்குறிப்பு தருக.
11) தலைவியின் பேச்சில் வெளிப்படுகின்ற பாடுபொருள் யாது?
12) இசைத் தூண்கள் யார் காலத்தில் அமைக்கப்பட்டவை?
13) 'தலை' - எனும் முடியும் குறளை அடிபிறழாமல் எழுதுக.

**III. எவையேனும் மூன்று வினாக்களுக்கு மட்டும் விடையளி:** **3×2=6**

14) **பிழைநீக்கி எழுது:**
அ) மதீனா சிறந்த இசை வல்லுநர் வேண்டும்.
ஆ) நல்ல தமிழுக்கு எழுதுவோம்.

15) **மரபுப் பிழைகளை நீக்கி எழுதுக:**
அ) இல்லத்தின் அருகே புதிதாகக் கூரை போட்டனர்.
ஆ) தென்னை மட்டையிலிருந்து நார் எடுத்தார்.

16) **கலைச்சொல் அறிக:**
அ) Melody - ஆ) Sentence -

Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in



V9T

17) **அகராதி காண்க:**

அ) காண் - ஆ) தாமம் -

18) **உவமைத் தொடர்களை உருவகத் தொடர்களாக மாற்றுக:**

அ) தேன் போன்ற மொழியைப் பவளவாய் திறந்து படித்தாள்.

ஆ) முத்துநகை தன் வில் போன்ற புருவத்தில் மை தீட்டினாள்.

**IV. எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளி:** **4×3=12**

**(குறிப்பு: 24 ஆம் வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்)**

19) சங்ககாலப் பெண்பாற் புலவர்களின் பெயர்களை எழுதுக.

20) நாயக்கர் காலச் சிற்பங்களின் நுட்பங்கள் யாவை?

21) கைபிடி, கைப்பிடி - சொற்களின் பொருள் வேறுபாடுகளையும் அவற்றின் புணர்ச்சி வகைகளையும் எழுதுக.

22) இன்றைய பெண்கல்வி என்னும் தலைப்பில் வில்லுப்பாட்டு வடிவில் பாடல் எழுதுக.

23) நீலாம்பிகை அம்மையாரது தமிழ்ப் பணியின் சிறப்பைக் குறித்து எழுதுக.

24) 'கல்லிடைப் பிறந்த .........' எனத் தொடங்கும் இராவண காவியம் பாடலை அடிபிறழாமல் எழுதுக.

**V. விடையளி:** **2×5=10**

25) அ) உங்கள் பள்ளி நூலகத்திற்குத் தமிழ்-தமிழ்-ஆங்கிலம் என்னும் கையடக்க அகராதி பத்துப்படிகளைப் பதிவஞ்சலில் அனுப்புமாறு நெய்தல் பதிப்பகத்திற்கு ஒரு கடிதம் எழுதுக. **(அல்லது)**

ஆ) **விளம்பரத்தைச் செய்தித்தாள் செய்தியாக மாற்றி அமைக்க:**

> புத்தகம் படிப்போம்! புதியன அறிவோம்!
>
> **புத்தகத் திருவிழா**
>
> நாள் : நவம்பர் 19 முதல் 28 வரை
> இடம் : சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.
> நேரம் : காலை 8 மணி முதல் மாலை 6 மணி வரை
> (முதல் நாள் காலை 9 மணிக்குத் தமிழகக் கல்வி அமைச்சர் தொடங்கி வைக்கிறார்)
> (நாள்தோறும் மாலை 6 மணிக்குப் புதிய புத்தகங்கள் வெளியீடும் சிறப்புப் பேச்சாளர்களின் உரையும் இடம்பெறும்)
>
> **அனைவரும் வாரீர்! அறிவுத்திறம் பெறுவீர்!**

26) **காட்சியைக் கண்டு கவினுற எழுதுக:**



**VI. விடையளி:** **1×8=8**

27) அ) தமிழ்நாட்டுச் சிற்பங்கள் கலைநயம் மிக்கனவாகவும் வரலாற்றுப் பதிவுகளாகவும் இருப்பதை நிறுவுக. **(அல்லது)**

ஆ) நூலகம், நூல்கள் ஆகியன குறித்து அண்ணாவின் வானொலி உரையில் வெளிப்படுகின்ற கருத்துகள் யாவை?

----------

Kindly send me your study materials to padasalai.net@gmail.com